(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

ஐ. பத்திரப்பதிவு [தமிழ்நாடு திருத்த] சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

*திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப்பதிவுச் சட்டத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் இங்கே சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இப்போது கிராமங்களிலே நிலம், வீடு வாங்குகிறவர்கள் பத்திரங்களைத் தங்களுடைய கிராமங்களிலேயே கூட எழுதிக்கொள்வார்கள், பிறகு பதிவாளர் அலுவலகம் இருக்கிற இடங்களுக்குச் சென்று பத்திரத்தைப் பதிவு செய்கிறபோது இதுவரையில் உரிமம் பெற்றவர்கள் பத்திரத்தை எழுத வேண்டுமென்ற நிலைமை தமிழகத்திலே இல்லை. அவர்கள் பதிவு செய்கிறபோது நகலை எடுக்கிறார்கள். அலுவலகத்தின் அருகாமையிலே இருப்பார்கள், பிறகு அவர்களால் நகல் எடுக்கப்பட்டு முறையாகப் பதிவு செய்யப்படுவது வாடிக்கையாக இருந்து வருகிறது. இப்போது நமமுடைய அரசு கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்திலே செங்கோட்டை போன்ற பகுதிகளிலே அவை கேரள மாநிலத்தோடு இருந்தபோது கையாண்ட விதிகளைத் தமிழகத்திலே உள்ள எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்துகிற முறையில் பத்திரத்தை எழுதிகிறவர்களுக்கு உரிமம் வழங்குகிற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து அவர்களுக்கு உரிமம் வழங்குவது அல்லது அவர்களை நீக்குவது போன்ற அதிகாரங்களை அதனுடைய தலைவருக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ கொடுக்க வேண்டுமென்ற நிலைமையிலேதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

[நண்பகல் 12-00]

என்னுடைய ஐயமெல்லாம், இதிலே ஏற்கனவே இந்த அரசாங்கத்திலே சொல்லப்பட்ட குறிப்பிலே இருக்கும் முறைகளால் பொதுமக்கள் மிகவும் இன்னலுற்றார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது நியாயம் அல்ல. இந்தப் புதிய முறையாலேதான் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்களோ என்ற

@ 1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1981 மார்ச் 2] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

ஐயம் எனக்கு ஏற்படுகின்றது. காரணம், இன்றையதினம் கிராமங்களிலே சொத்து வாங்குபவர்கள் அதற்குண்டான விலையையெல்லாம் பேசி, பத்திரத்தை வாங்கி வந்து எழுதிவிடு கிறார்கள். குறிப்பிட்ட நாட்களில் வந்து பதிவு செய்யப்பட வேண்டுமென்று விதிதான் இருக்கிறது. ஆனால் பத்திரம் எழுது வதற்கே உரிமம் வழங்குகின்ற நிலைமை வந்துவிட்டால் இதிலே என்ன முறைகளை அரசாங்கம் கையாளப் போகிறது என்பது பற்றி அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலில் விளக்கம் அளிக்க வேண்டும்.

எந்தத் தகுதியின் அடிப்படையில் உரிமங்கள் வழங்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. பத்திரம் எழுதுவதற்குத் தனியாக தகுதி இருக்க வேண்டுமென்று சொல்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம், கிராமங்களில் உள்ள பல படித்தவர்கள், கிராமக் கர்ணங்களாக இருப்பவர்கள் கூட பத்திரம் எழுதிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் உரிமம் என்ற முறையில் வரும்பொழுது ஏதோ பதிவாளர் அலுவலகத்திலே உள்ள மூன்று பேர், நான்கு பேர், ஐந்தாறு பேர்களுக்கும் அந்த உரிமங்களை வழங்கி அவர்கள் மட்டும் அந்த உரிமங்களைப் பெற்றுவிட்டால், அந்தப் பதிவாளர் அலுவலகத்திற்கு நூற்றுக் கும் மேற்பட்ட கிராமங்களிலே இருந்து மக்கள் வருகின்றபொழுது அந்த உரிமம் பெற்றவர்களுக்கு நேரம் இருக்க வேண்டும். நான் கைந்து பேர்கள் மட்டும் பத்திரம் எழுதக்கூடிய காலகட்டத் திற்கு ஆளாகின்றபொழுது அங்கு வருபவர்களுக்கு, இன்றைய தினம் எங்களால் எழுத முடியாது என்று சொல்லி அந்த மக்கள் திரும்பிச் செல்ல நேரிடலாம். அதனால் செலவும் அதிகமாக லாம, இப்படிப்பட்ட பல்வேறு தொந்தரவுகள் ஏற்படுவதற்கு இதிலே வாய்ப்புகள் உண்டு.

கிராமங்களிலே உள்ள யார் உரிமம் கேட்டாலும் அவர்களுக்கு இந்த உரிமம் வழங்கப்பட வேண்டும். பெரிய தகுதி என்று வைத்துவிட்டால் உரிமம் வழங்குகின்ற அதிகாரிகள் ஏதோ தங்களுக்கு வேண்டியவர்களுக்கு அந்த உரிமங்களை வழங்கு வதற்கும் மற்றவர்களுக்கு வழங்கவில்லை என்ற நிலைமையும் ஏற்பட்டு விடுவதற்கான வாய்ப்பும் உண்டு. இந்த நிலைமைகளெல்லாம் வராமல் அரசாங்கம் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது இருக்கின்ற நிலைமையினாலே பெரிய பிரச்னையொன்றும் வந்துவிடப் போவதில்லை.

ஆகவே, இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வருகின்ற பொழுது கிராமங்களிலே உள்ள யார் மனுச் செய்தாலும் அவர்கள் அத்தனை பேர்களுக்கும் நிச்சயமாக உரிமங்கள் வழங்கு வதற்குத் தயக்கம் காட்டக்கூடாது, பத்திரங்கள் எழுதுவ திலே மிகத் திறமையானவர்களெல்லாம் ஏற்கனவே இருக் கிறார்கள். அவர்களுக்கெல்லாம் உரிமங்கள் வழங்கப்பட வேண் டும். பதிவாளர் அலுவலகத்திலே உள்ளவர்களுக்கு மட்டுமே

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1981 மார்ச் 2

வழங்குகின்ற நிலைமை என்று வந்துவிடுமோ என்ற ஐயம் எனக்கிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு விடக் கூடாது, கிராமங்களிலே தனியாக பத்திரம் எழுதுபவர்கள் கூட உரிமம் கேட்கின்றபொழுது அவர்களுக்கும் கொடுத்து விட்டால் கிராம மக்கள் ஆங்காங்கு அதற்குண்டான பத்திரத்தை எழுதிக் கொள்ளலாம் ; பிறகு பதிவாளர் அலுவலகத்திற்கு வரும்பொழுது பிரச்னைகள் இல்லாமல் இருக்கும். எனவே இப்படிப்பட்ட பிரச்னைகளையெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டும். இல்லையென்றால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் ; ஏராளமான தொந்தரவுகள் ஏற்படும் ; காலம் வீணாகும். பதிவாளர் அலுவலகத்திற்கு வர வேண்டுமென்றால் இலஞ்ச லாவண்யம் பெருகக் கூட வழி இருக்கின்றது. அதே நேரத்தில் சிலருக்கு மட்டும் உரிமம் வழங்கினால் அவர்கள் கூடுதல் கட்டணம் கோர நேரிடலாம். கட்டணம் கேட்பதில் ஒரு நிர்ணயம் செய்யப் போகிறார்களா என்பதெல்லாம் இதிலே சொல்லப்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகளெல்லாம் வராமலாவது அரசாங்கம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன், நன்றி வணக்கம்.

*திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவரவர்களே, தற்போது இந்தப் பத்திரப் பதிவுச் சட்டப்படி சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ் இருக்கிற நிலைப்படி யார் வேண்டுமானாலும் யார் நிலத்தை வேண்டுமென்றாலும் கிரயம் செய்து கொள்ளலாம் ; அதற்கான வெரிபிகேஷன் கிடையாது. என்னுடைய நிலத்தை இன்னொருவருக்கு எழுதி வைக்கலாம் ; வேறொருவருடைய நிலத்தை நான் எழுதி வாங்கிக் கொள்ளலாம். சப்ரிஜிஸ்தராரைக் கேட்டால் எங்களுடைய வேலை பதிவு செய்வது தான் என்று சொல்லி விடுவார்; மற்ற விஷயங்களுக்கு, வேண்டுமென்றால் சிவில் கோர்ட்டுக்குப் போங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள் ; பத்திரம் எழுதும்போது நோட்டையும் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள் என்று விளையாட்டாகச் சொல்வார்கள். நோட்டைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால் அது லிட்டிகேஷன் சொத்து, அதற்குத் தயார் ஆகிக் கொள்ளுங்கள் என்று மறைமுகமாக எச்சரிக்கின்ற ஒரு குறிப்பாகும். இப்படிப்பட்ட நிலையால் கிராமாந்திரப் பொருளாதாரம் பாதிக்கப்படுவது மட்டுமல்ல ; சமுதாய விரோதிகளுக்குச் சௌகரியமும் உண்டாகிறது. சிவில் கோர்ட்டுகளில் ஆண்டுக்கணக்காக ஒரு சொத்து சம்பந்தமாக வழக்கு இருந்து, இரண்டு குடும்பத்தாரும் மிகவும் கேவலமான நிலைமைக்குச் சென்று, கொலையில்கூட முடிகிறது. காரணம், சப்-ரிஜிஸ்திரார் வெரிபிகேஷன் இல்லாமல் யார் யார் மேல் வேண்டுமானாலும் எந்தச் சொத்தையும் எழுதலாம் என்று இப்பொழுது இருப்பதால் இந்தக் கேடான நிலைமை உண்டாகிறது. ஆகவே, இதைக் கொண்டு வருவது மட்டுமல்லாமல், உடனடியாக அதற்கு ஆவன செய்து, சரியான

1981 மார்ச் 2] [திரு. எல். இளையபெருமாள்]

நிலைமைகளிலே அவைகளை விசாரிக்கச் செய்து, அந்த விசாரிப்பின் காரணமாக, விற்கின்றவர்களுக்கும், வாங்குகின்றவர்களுக்கும் தொந்தரவு இல்லாத வகையில் தெரிந்து செய்ய வேண்டும் என்று கோருகிறேன். அப்படிக் கேட்டால் காலதாமதம் ஆகிறது என்று சொல்லி தப்பித்துக் கொள்கிறார்கள். அந்தக் காலதாமதத்தினால் ஆகிற செலவை, 4 அலுவலர்களுக்குப் பதிலாக 5 பேர்களை நியமித்தால், காலதாமதத்தைச் சீர் செய்ய முடியும். ஆனால், அதைச் செய்யாமல், நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம். கோர்ட்டில் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால், கிராம அமைதி குறைகிறது. கிராமத்தில் சண்டை உண்டாகிறது. நிரபராதிகள் தவிக்கிறார்கள். இந்தக் காலத்தில் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டுமென்றால், வசதி படைத்தவர்கள், செல்வாக்கு படைத்தவர்கள், செல்வந்தர்கள், தகுதி படைத்தவர்கள்தான், கோர்ட்டிலே நியாயம் பெற முடியுமே தவிர, நிரபராதிகள், ஏழைகள், இவர்கள் எல்லாம், குறிப்பாக, 1 ஏக்கர், 2 ஏக்கர் நிலம் வாங்கியவர்கள் நிச்சயமாக இன்றைய நிலைமையிலே நியாயம் பெற முடியாது. ஆகவே, அவைகளைத் தீர்க்க விசாரித்தாலொழிய ரிஜிஸ்டிரேஷன் செய்ய முடியாது என்ற நிலைமையை அரசு கொண்டு வரவேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் சில விவசாயக் குடும்பங்களை நன்றாகப் புரிந்துக் கொண்டிருப்பவர்கள். அதிலும் இதுபோன்ற செயல்கள் நடைபெறுவதை அறிய சக்தி உடையவர்கள், ஆகவே, அரசு அதிலே கவனம் செலுத்தி ரிஜிஸ்டிரேஷன் செய்வதற்கு முன்கூட்டியே, அவைகளைத் தீர்க்கமாகப் பரிசீலனை செய்த பிறகுதான் என்ற நிலைமைகளை—இந்தச் சட்டத்திலே இல்லாவிட்டாலும்—அதை உடனடியாகக் கொண்டு வந்து செய்வார் என்று நம்பிக்கையை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, உரிமங்கள் வழங்குதல், அந்த உரிமங்கள் வழங்குவதிலே, ஒரு குறிப்பிட்ட அளவுக்காவது, அவர்களுக்குப் படிப்புத் தகுதி இருக்க வேண்டும். அப்படியில்லாமல், கிராமங்களிலே, பழைய கணக்குப் பிள்ளைகளிருந்தார்களே, அவர்களை எடுத்துவிட்டு, புதிய கணக்குப் பிள்ளைகள் என்று போட்டார்களே, 10 ஊருக்கு 1 ரெவின்யூ இன்ஸ்பெக்டர் என்று, அதனால் முன்னாலிருந்த நிலைமையை விட புதிய கணக்குப் பிள்ளைகள், நிலைமை படுமோசமாக அமைந்திருக்கிறது. ஆகவே, புதிய கணக்குப் பிள்ளையிடமும் இதே நிலைமை உருவாகுமானால் எப்படி சரியாக இருக்கும்? உண்மையிலே எழுதுவதற்கு மட்டுமல்ல தங்களுடைய சக்திக்கு, வாய்ப்புக்கு வேண்டிய அளவிற்குத் தங்களுடைய காரியங்களை பிறருடைய சொத்துக்களைத் புரியாதவர்கள் என்ற காரணத்தினால், வசதியற்றவர்கள் என்ற காரணத்தினால், சட்டத்திற்கு முரணாக, இந்த அலுவலர்களைப் பயன்படுத்தி, பதிவு செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே குறைந்தபட்சம் எஸ்.எஸ்.எல்.சி. யாவது படித்திருக்க

வேண்டுமென்று அரசு ஆணையில் சொல்ல வேண்டும். ஆனால், அதைச் சொல்கின்ற சமயத்தில், குறிப்பிட்ட நபர்களுக்கு சப் ரிஜிஸ்டிரார் என்று பெயர் வைத்து விட்டு, அதன் மூலமாக, அன்பளிப்பு என்று சொல்வார்கள், சிலர் லஞ்சம் என்று சொல்வார்கள், எழுத்துக் கூலி என்று சொல்வார்கள். இப்படிச் சொல்லி வாங்கும் நிலை இருக்கக் கூடாது. அந்தப் பகுதியில் படித்து எத்தனை பேர் வேலையற்றிருக்கிறார்களோ, படித்து பட்டம் பெற்ற எத்தனை பேர் எழுதத் தயாராக இருக்கிறார்களோ அத்தனை பேருக்கும் எந்தவிதச் சங்கடமும் இல்லாமல் உரிமங்கள் வழங்கப்பட்டால், எல்லோருக்கும் வாய்ப்பு கிடைக்கும். அதனால், தவறான காரியங்களைச செய்வதற்கு வழியற்றுப் போகிறது. ஒருவர் இருவர் என்று சொல்லி அவர் சப்-ரிஜிஸ்டிராருக்கு வேண்டியவர் என்று சொல்லிக் கொண்டு, முன் பத்திரம் எழுதுவது, பின் பத்திரம் எழுதுவது, 3 நாள் அலைக்கழிப்பது, 7 நாள் அலைக் கழிப்பது என்ற பாவமான காரியத்திற்கு இடம் அளிக்காமல் எத்தனை பேர் ரிஜிஸ்டிரேஷன் எழுத முன் வருகிறார்களோ, அவர்களுக்குக் குறைந்த பட்சத் தகுதி வைத்து உரிமம் வழங்க வேண்டும். முன்னாள் கர்ணம் அந்தப் பணியைச் செய்ய முன் வந்தால், அவர்களுக்கு முன் னுரிமை கொடுத்து, பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து பத்திரங்கள் விற்பதிலே பினாமி டிரான்சேக்ஷன்ஸ் செய்ய வாய்ப்பிருக்கிறது. யாரெல்லாம் ஸ்டாம்ப் பேப்பர்கள் விற்கிறார்களோ, அவர்களுடைய தகுதி என்ன? நிலைமை என்ன? அவர்களுடைய செயல்கள் எவ்வகையில் இருக்கின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். அப்படி விற்கப்பட்ட பத்திரங் களை மாதத்திற்கு ஒரு முறையாவது சரி பார்த்து, எத்தனை ஸ்டாம்புகள் விற்கப்பட்டன, முதலில் இருந்த ஸ்டாக்குகள் எவ்வளவு? யாருக்கு விற்கப்பட்டது? எந்த அளவிற்கு விற்கப் பட்டன என்பதையெல்லாம் வெரிபிகேஷன் செய்ய வேண்டும்.

முன் தேதியிட்ட பத்திரங்கள் வாங்கி, அந்தப் பத்திரங்கள் மூலமாக ரிஜிஸ்டிரேஷன் செய்து, சிவில் கோர்ட்டில் வழக்குகள் வந்து, விவசாயக் குடும்பங்கள் மட்டுமல்லாது, ஏனைய குடும்பங் கள்கூட, சொத்துக்களை வாங்குவதிலே, விற்பதிலே பல கஷ்டங்களுக்கு உள்ளாகின்றன. இதனால் பல கொலைகளும் நிகழுகின்றன. இன்றைக்கு 2 ஆம் தேதி. ஆனால், 1 ஆம் தேதியன்று நேற்றைய தேதி போட்டு விற்பது எல்லாம் நடக்கிறது இப்படியெல்லாம் விற்பதைக் கடுமையாக, தீர்க்கமாகக் கவ னித்து, தடை செய்து, வெரிபிகேஷன் செய்து, விற்றவர்கள் மீது குறிப்பிட்ட அந்தப் பத்திரம் 4 மாதத்திற்குள்ளாக ரிஜிஸ்ட் ரேஷன் ஆகியுள்ளதா, இல்லையாயென்பதைப் பார்த்து, இல்லை யென்றால், ஏன் ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை யென்பதை யெல்லாம் விசாரித்து, விற்பனையைக் கட்டுப்படுத்துகிற

1981 மார்ச் 2] [திரு. எல். இளையபெருமாள்]

நிலைமை ஏற்பட்டாலொழிய கிராமங்களிலுள்ள ரிஜிஸ்தர் செய்வதில் ஏற்படும் கேவலமான நிலைமையை மாற்ற முடியாது. சட்டத்திலே இல்லாவிட்டாலும், சம்பந்தமான விவாதமாக இருப்பதால், நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு, இதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12—10]

பிறகு பத்திரப் பதிவு அலுவலகக் கட்டடங்கள், அவர்களுக்கு இருக்கிற வாய்ப்புகள் வசதிகள் மிகவும் பாவமான நிலையில் இருக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்காமல் இருக்கிறார்கள். ரெக்கார்டுகளைச் செய்வது என்பது மிகவும் முக்கியமான வேலை. ஒரு பக்கம் வேலையில்லா திண்டாட்டம். மறுபக்கம் போதுமான அளவுக்கு அலுவலகங்கள் இல்லாத அவல நிலை. இதனை சரி செய்து அவர்களுக்கும் ஆவன செய்து ரெக்கார்டுகளை செய்வதிலே காலதாமதம் இல்லாதது மட்டுமல்ல, தற்போது கேவலமான நிலை உருவாகின்றது. அதற்குக் காரணம் போதுமான அலுவலகம் இல்லை என்பதுதான். இதனால் அரசுக்கும் கெட்ட பெயர். சமுதாயத்துக்கும் கெட்ட பெயர். வருங்காலத்தில் கோர்ட்டுகளுக்கு மக்களைத் தள்ளுகின்ற கேடான காரியத்தை அரசு செய்தது என்ற பாவத்தை எடுத்துக் கொள்ளாத நிலையில் இதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு இந்தச் சட்ட முன்வடிவிலே இல்லாமல் இருந்தாலும் அரசுக்குப் பொறுப்பிருக்கிறது, 1952 முதல் ரிஜிஷ்டிரேஷன் ஐ. ஜி. அலுவலகத்தில் இருக்கிறவர்களுக்கு இந்த மாநில அரசு அவர்களுக்குக் கொடுத்த வேலை உயர்வு வாய்ப்புத் திட்டத்தின்படி நடக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டி இருக்கிறேன். 1973 ஆம் ஆண்டில் 622 பேர்கள் ஜூனியர் அசிஸ்டன்ட் இருந்தார்கள், எல். டி. சி.யாக இருந்தவர்களுக்கு யு. டி. சி.யாக பிரமேஷன் கொடுக்கப்பட்டது. ஆனால் 122 பேர்களை சப் ரிஜிஸடிரார்களாக மாற்றி கொடுத்த உத்யோகத்தின் உயர்வில் நிச்சயமாக அவர்களுடைய விகிதாச்சாரப்படி கிட்டத்தட்ட 20-லிருந்து 22 பேர்களுக்கு கொடுத்திருக்கவேண்டும். இது குறித்து அன்றைய அரசுக்கும் சொல்லியிருக்கிறேன். இன்றைய அரசுக்கும் சொல்லியிருக்கிறேன். அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அது தாழ்த்தப்பட்ட மக்களாகிய இவர்களுக்கு வந்து சேர்ந்ததா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இது சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் செக்ரட்டரி இடத்திலும் நான் சொன்னபோது, செய்கிறேன்: கொடுக்க வேண்டும்தான் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் நடைமுறையிலே செய்யவில்லை, நம்முடைய அமைச்சர் அவர்

[திரு. எல். இளையபெருமாள்] [1981 மார்ச் 2

கள் மிகவும் நல்லவர். அவருக்கும் அரசுக்கும் நல்ல பெயர் வேண்டும் என்பதாலே சொல்கிறேன். குஜராத்திலே நடப்பது என்ன? குஜராத்திலே நடக்கின்ற அந்தக் கேடான காரியம் இங்கே வராமல் இருக்கவேண்டும். தமிழகத்திலே அந்நிலை வராது என்று நம்பிக்கை எனக்கு உண்டு. அப்ரஸ்டு யூனியன் என்று வைத்துக் கொண்டு அரசாங்கத்துக்கு விரோதமாக, அரசியல் சட்டத்திற்கு விரோதமாக ஏன் அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கிறீர்கள் என்று கண்டித்து, நாளைக்கு ஊர்வலம் அங்கே நடைபெறவிருக்கிறது. ஒரு பக்கம் அரிசனங்களுக்கு 18 சதவீதம் கொடுத்தோம். அரிசனங்களுக்கு இனாமாக வீடு கொடுத்தோம். அரிசனங்களுக்கு இனாமாக மாடு கொடுத்தோம், அரிசனங்களை டாக்டர்களாக படிக்க வைத்தோம். வக்கீலாகப் படிக்க வைத்தோம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் டாக்டர்களாகப் படிக்கின்றவர்களுக்குப் போதிய உணவு கொடுப்பதில்லை, படித்தபின் வேலை கொடுப்பதில்லை. மத்திய சர்க்கார் கொடுப்பதற்கு மேலாக, மாநில சர்க்கார் கொடுக்கவேண்டும். முந்தைய அரசு காங்கிரஸ் கொடுத்து வந்தது. இந்த அரசு அதை நிறுத்தி வைத்திருக்கிறது. ஆகவே போதுமான அளவுக்குள்ள நிலையால் அவர்கள் படிக்க முடியவில்லை. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் நீங்கள் கொடுக்கின்ற விளம்பரத்தினால் உங்களுக்கும் கெட்ட பெயர் கிடைக்க வேண்டும் என்று ஆசையோடு வந்த நாங்களும் கிடைக்காததனால் உங்களை விரோதிகளாகக் கருதுகிறோம். அது கிடைக்காத மக்கள் இதர சமுதாயத்தில் நலிந்தவர்கள் இருக்கிறார்கள். ஏழைகள் இருக்கிறார்கள். அவர்கள் என்ன எண்ணுகிறார்கள் என்றால் அரிசனங்களாகப் பிறக்கவில்லையே என்றும், பிறந்திருந்தால் சப்-ரிஜிஸ்டிரராக ஆகியிருப்பேனே என்றும் அங்கலாய்க்கிறார்கள். ஆனால் சமுதாயத்திலே 20 சதவீதம் போக 80 சதவீதம் மக்கள் பாதிக்கப்பட்டதாக நினைக்கும் மக்கள் இன்று ஒன்று சேர்ந்து இந்தச் சமுதாயத்தை அழிக்கக் கூடிய அளவுக்கு நிலைமையை அரசியல் சட்டம், அரசாங்க உத்தரவு இவைகளை மீறுவதான நிலையில் அப்ரஸ்டு யூனியன் என்று வைத்துக் கொண்டு இருப்பது, மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி, கடுமையாக எண்ணாமல் அதற்கு இடம் கொடுத்திருப்பது நல்லதல்ல.

1975 ஆம் ஆண்டு பெரியமேட்டில் சர்ப்-ரிஜீடிஸரராக ஒரு பெண்மணி இருந்தார்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரப் பதிவு துறை பற்றிய விளக்கத்தை மட்டும் கேளுங்கள்,

திரு. எல். இளையபெருமாள்: இதுவும் அந்தத் துறை நிர்வாகத்தைப் பொறுத்தது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அவர்கள் பத்திரிகையாகத் தான் இருக்கிறார்கள்.

[1981 மார்ச் 2]

திரு. எல். இளையபெருமாள் : நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் 'இங்கே ராம ராஜீயம் நடக்கிறது; 'பத்திரமாக இருக்கிறார்கள்' என்று சொன்னதற்கு நன்றி. ஆனால், பக்கத்தில் காந்தி பிறந்த நாடு என்று சொல்லக்கூடிய குஜராத்தில் இருக்கிற அவல நிலை இங்கேயும் பரவிவிடக் கூடாதே என்கிற கவலையில் உங்கள் தம்பியாக இருக்கும் இளையபெருமாள் சொல்வது, உங்கள் ஆட்சியில் நாங்கள் பத்திரமாகத்தான் இருக்கிறோம். எங்களுக்குப் பத்திரம் இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால், நான் தெரிவிக்க விரும்புகிற பிரச்னையில் 1973-ம் ஆண்டில் இருந்து எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த அந்தப் பெண்மணி பிரச்னையைப் பற்றி சொல்லியும், அன்றைய தி.மு.க. அரசும் ஒன்றும் செய்யவில்லை. ஆளுநர் ஆட்சியிலும் ஒன்றும் செய்ய வில்லை. இந்த அ.இ.அ.தி.மு.க. அரசு வந்த பிறகும் ஒன்றும் செய்யவில்லை. நான் கொடுத்த மனுக்களுக்கு எந்தவிதமான பலனும் இல்லையே என்ற காரணத்தால்தான் சொல்லிக் கொள் கிறேன்.

பெரியமேட்டில் என்ன வேடிக்கை நடந்தது என்று சொன்னால், அந்தப் பெண்மணி சப் ரிஜிஸ்ட்ரார் கீழே எல்.டி.சி.யாக யார் வேலை பார்த்துக் கொண்டிருந்தாரோ அவரை சப்-ரிஜிஸ்டிரராகப் பதவி உயர்வு கொடுத்துப் போட்டுவிட்டு, அந்த அம்மையாரை அங்கேயே அவர் கீழே வேலை செய்கிற முறையில் யு.டி.சி.யாகப் போட்டுவிட்டார்கள். பிறகு, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு எஸ். ஆர். பதவி கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தாலே, அல்லது யூனியன் சொன்னதற்காக அரசு பயந்தோ, அல்லது அரசியல்வாதிகள் ஓட்டுக்குப் பயந்தோ பதவி உயர்வு கொடுத்தார்கள். ஒருவரை பதவி இறக்கம் செய்தால் அவர்களை வேறு இடத்திற்கு மாற்றிப் போடவேண்டுமே தவிர, அதே இடத்திலேயே போட்டு, அதுவும் அதே இடத்தில் அவருக்குக் கீழே வேலை பார்த்து வந்தவரை ப்ரமோட் செய்து, அவர் கீழேயே இவரை வேலை செய் என்று சொல்வது சரியல்ல. இந்த நிலைமைகள் குஜராத்தில் ஏற்பட்ட நிலைகளுக்கு எண்ணெய் ஊற்றுவதுபோலாகும் என்று மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த பில்லில் நான் ஒன்றும் அதிகம் சொல்லவிரும்பவில்லை, முக்கியமாக எஸ். ஆர். ஆபிசிலே நாம் செய்கின்ற வேலைகளிலே வெரிபிகேஷன் இல்லாமல் ரிஜிஸ்டர் செய்வது கிராம மக்களுக்குக் கேடாகப்படுகிறது. உரிமம் கொடுக்கிறபோது அதிகம் பேருக்குக் கொடுக்க வேண்டும். குறைந்தபட்சக் கல்வி இருக்க வேண்டும். குறிப்பாக, கர்ணம், மணியக்காரர் போன்று அந்த ஊரில் பணி யாற்றியவர்கட்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.